REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

FREE COPY

# நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மாசி 3உ செவ்வாய் (15—2—55) ★ ★ வெளியூர்: மாசி 4உ புதன் (16—2—55) [இதழ் 209

## டிட்டோ ஆச்சரியமுற்ருராம்!

★

மார்ஷல் டிட்டோ கல்கத்தாவிற்கு வந்திருந்தபோது மே. வங்க முதலமைச்சர் பி. சி. ராயிடம், 'எப்படி மேற்கு வங்க சர்க்காரால் 632 நிலப் பிரபுக்களுடைய நிலங்களை நஷ்ட ஈடில்லாமல் எடுத்துக் கொள்ள முடிந்தது ?' என்று கேட்டாராம்.

ஜமீன் ஒழிப்புப் பற்றி மார்ஷல் டிட்டோ ஆச்சரியப்பட்டது பற்றி மேற்கு வங்க சட்ட சபையில் டாக்டர் ராய் குறிப்பிட்டார்.

எதிர்க் கட்சிக்காரர்கள், 'சர்க்கார், நாட்டிற்கு நன்மை எதும் செய்யாது விட்டனர்,' என்று குற்றம் சாட்டியபோது, டாக்டர் ராய் இதைச் சுட்டிக் காட்டினார்.

# ஏகாதிபத்திய முனைப்பு! இந்து மத வெறி!!

# இவை கொண்டதே பண்டித நேருவின்

# வட இந்தியா!

## பண்புடைய நாம் எப்படி கூடி வாழ்வது?

### சான்றுகள் பல காட்டி பொதுச்செயலாளர் அண்ணுதுரை விளக்கம்

13—2—55-ல், பெங்களூரில் நடைபெற்ற கர்நாடக தி. மு. கழக அரசியல் மாநாட்டில் பொதுச்செயலாளர் அண்ணுதுரை அவர்கள் ஆற்றிய கருத்துரையின் ஒரு பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது : மற்ற பகுதி இங்கு தரப்படுகிறது :—

"சிலர் கேட்கிருர்கள்—ஏன் உங்களுக்கு இந்தச் சிரமம்? காங்கிரசை ஏன் எதிர்க்க வேண்டும்?—என்று! ஆம் ; நாம் காங்கிரசை எதிர்க்கிருேம்—காரணமின்றி அல்ல! காங்கிரஸ் என்ருல், இன்று அது, இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்திருக்கிற ஒரு கட்சி.

"காங்கிரசுடன் நாங்கள் சேர வேண்டும் என்று, தமிழ் நாடு காங்கிரஸ் கட்சி முன்னுள் தலைவர் கரையாளர் பேசியிருந்தார்—'காங்கிரசில் வயது முதிர்ந்தோர்களே இருக்கிருர்கள் ; தி. மு. கழகத்தில் ஏராளமான வாலிபர்கள் இடம் பெற்றிருக்கிருர்கள் ; அவர்கள் எல்லாம் காங்கிரசில் சேர்ந்து பணி புரிய வேண்டும் ; பெரியாருக்கும், அண்ணுதுரைக்கும் காங்கிரசின் கதவுகள் திறந்தே இருக்கின்றன,'—என்று பேசியிருந்தார்.

"நாங்கள் ஏன் சேர்ந்துவிடக்கூடாது? காங்கிரஸ் கட்சியில் இன்று சேர்வதானல், இப்போது அங்கிருக்கிற இன்னின்னவர்களை வெளியேற்றிவிட்டால்தான் நாங்கள் வருவோம் என்று நிபந்தனை விதித்து, நாங்கள் காங்கிரசில் சேர்ந்துகொள்ள முடியும் ; என்ருலும், இத்தனை அழைப்பு வந்த பின்னரும், நாங்கள் காங்கிரசில் சேராது அதனை எதிர்க்கிருேமே—ஏன் ?

"காங்கிரசை எதிர்த்தால் தடை உத்தரவுகள், தடியடிப் பிரயோகங்கள், குண்டுமாரி, சிறைச்சாலை, வழக்குகள் இன்ன பிற என்று அனுபவிக்க வேண்டியிருக்கிறது என்பதையும் நாங்கள் கண்டுவருகிருேம்.

"காங்கிரசில் இருந்தால் பதவிகள், பட்டங்கள் கிடைக்கும்—மந்திரிகளாகியிருக்கலாம் என்பது தெரிந்தும், இலாபம் தருகிற காங்கிரசை விட்டுவிட்டு எதிர்த்து நிற்கிருேமே—ஏன் ? தேன் குடம் அங்கிருக்கிறது என்ருலும் அதை விடுத்து, தேள் மிகுந்த பாதையில் செல்கிருேமே—ஏன் ? எங்களுக்கென்ன பைத்தியமா ?

"இதனல்தான் பண்டித நேருகூட, 'பைத்தியக்காரர்கள்' என்று எங்களைக் கூறினர்போலும் !

"பட்டம், பதவிகளை விடுத்து, காங்கிரசை எதிர்த்துத் தனியாக நின்று, தனிப் பாதையில் நடந்துபோகும் எங்களை 'பைத்தியக்காரர்கள்' என்று அழைக்கிருர்கள் ; ஒருவகையில் நாங்கள் பைத்தியக்காரர்கள்தான்.

"பைபிளும், மதவாதிகளும் அதுவரை 'உலகம் தட்டை' என்று ஓதி வந்தனர் ; ஆனல், 'உலகம் உருண்டை' என்று கலிலியோ கூறினன் ; அன்று அவனைப் பைத்தியம் என்றுதான் கூறினர்கள் ; என்ருலும், அவன், எதிர்ப்புகளையும் தாங்கிக்கொண்டு, 'உலகம் உருண்டைதான்' என்ற உண்மையை நிலைநாட்டினன்.

"அதுபோல சில நியாயங்களைப் பெற, உரிமைகளை நிலை நாட்ட, விடுதலையுடன் வாழ நாம் போரிடும்போது, நம்மை, 'பைத்தியக்காரர்கள்' என்று கூறுகிருர்கள் ; என்ன செய்வது ? உலகத்திற்கு, அவ்வப்போது, கலிலியோவைப் போன்ற சில பைத்தியக்காரர்கள் தேவைப்படுவதுபோல், இந்த நாட்டிற்கும் நம்மைப்போன்ற பைத்தியக்காரர்கள் தேவைப்படுகிருர்கள்.

"நம்மை ஏசிப் பேசுபவர்களும் சரி, எதிர்ப்பதாகக் கூறுபவர்களும் சரி—நாம் சொல்வதைக் கேட்காதவரையில்தான் நம் மீது ஆத்திரப்படுகிருர்கள் ; அவர்கள், தி. மு. கழகம் எப்படி இவ்வளவு வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதை நன்ருகப் புரிந்துகொள்ளவேண்டும் ; கேட்காத வரையில் கோபித்துக் கொள்கிறவர்கள், கேட்டபின்பு கோபம் தணிந்து, ஆத்திரம் குறைந்து, நம்மோடு சேர்ந்து பணியாற்றுகிற அளவுக்கு குணம் கொண்டவர்களாகயிருக்கின்றனர்.

"எனக்கு சம்பவம் ஒன்று நினைவுக்கு வருகிறது—பத்தாண்டுகளுக்கு முன்னல், தமிழ் நாட்டில் உள்ள சிவகெங்கை என்ற ஊருக்கு நானும், பெரியார் இராமசாமி அவர்களும் சென்றிருந்தோம் ; அப்போது, நாங்கள் வருகிருேம் என்ற வெறுப்பால், அந்த ஊரில் இருந்த சிலர், கடைவீதி முழுவதும் மூன்று பர்லாங் தூரத்திற்குப் பழைய செருப்புகளைக் கோர்த்து தோரணமாகக் கட்டியிருந்தார்கள் ; நாங்கள் அதுகண்டு, அந்த வேலையைச் செய்தவர்களுக்காகப் பரிதாபப்பட்டோம் ; 'எத்தனை நாள் கஷ்டப்பட்டு, யார் யாரிடம் சென்று செருப்புகளைச் சேகரித்து, இந்தக் காரியத்தைச் செய்ய என்னவெல்லாம் இன்னல் பட்டார்களோ,' என்று எண்ணிப் பரிதாபப்பட்டோம் ; இன்று அந்த ஊர் திராவிடர் கோட்டையாயிருக்கவில்லையா ? இது எப்படி எங்களால் முடிந்தது ? நாங்கள் என்ன ஏதாவது பயில்வான் பரம்பரையினரா ?

"அதைப் போன்று, இங்கும், தி. மு. கழகத்தினை யாராவது எதிர்க்கிருர்கள்—கழகத்தவர் மீது ஆத்திரப்படுகிருர்கள் என்ருல், அதுகண்டு நம் கழகத்தவர் கலங்கத் தேவையில்லை ; வருந்தவும் தேவையில்லை.

"நாம் என்ன சொல்கிருேம் என்பதை கேட்காமலேயே கோபப்படுவார்கள் ; பின்னர், கேட்டால் சற்று ஆத்திரப் படுவார்கள் ; அவர்கள், ஆத்திரம் கண்டு கழகத் தோழர்கள் ஆயாசப்படவோ ஆர்ப்பாட்டம் செய்யவோ வேண்டாம் ; ஆத்திரப்படுகிற அந்த நல்லவர்களுக்கு விஷயங்களை விளக்கமாகச் சொல்லுங்கள் ; அவர்கள் கோபம் தணிந்த பின் நம்மீது அவர்களுக்குச் சிறிது சந்தேகம் பிறக்கலாம் ; அந்தச் சந்தேகங்களையும் துடையுங்கள் ; பின்பு அவர்கள், நாம் கூறுகிற உண்மைகளைத் தெளிவாகப் புரிந்துகொண்டால், நிச்சயமாக நம்மை ஆதரிப்பார்கள்.

"எனவே, இங்குள்ள கழகத் தோழர்கள், கன்னட மக்களுக்கு, கழகத்தின் இலட்சியம் குறித்தும், கொள்கைகள் குறித்தும் ஏற்படும் சந்தேகங்களை அவ்வப்போது போக்க வேண்டும்.

ஆந்திரர், கேரளர், கன்னடியர் என்ற இதர திராவிட இன மக்களில் கன்னடியர்தான் திராவிட நாடு கோரிக்கைக்கு சீக்கிரம் ஆதரவு தர முற்படுவார்கள் என்று நான் நம்புகிறேன். கர்நாடக மக்கள் என்று நான் குறிப்பாகக் கூறுவதற்குக் காரணம், 'திராவிட நாடு திராவிடருக்காகவேண்டும்,' என்று கூறும் பெரியார் இராமசாமி ஒரு கன்னடியர் ; கன்னடத்தைச் சேர்ந்த பெரியார் இராமசாமி அவர்களின் பேச்சைக் கேட்டுக்கொண்டு நாங்கள் எல்லாம் இப்படி அலையும்போது, நீங்கள் ஏன், இங்கு, தி. மு. கழக இலட்சியத்தை ஏற்றுக்கொள்வதில் அதிக அக்கரையாயிருக்கக் கூடாது ?

"தமிழர், ஆந்திரர், கேரளர், கன்னடர் ஆகியோரிடையே கூட்டுறவு ஏற்படவேண்டுமென்பது புதியதாகக் கோரப்படுகிற ஒன்றல்ல.

"திராவிடர் இயக்கத்தின் தோற்றுவாயாயிருந்த நீதிக் கட்சியில் இருந்த பெருந்தலைவர்கள் எல்லாம், திராவிடத்தின் எல்லா பகுதிகளிலுமிருந்து வந்தவர்கள்தான் ; சர். பி. தியாகராயர், முனுசாமி ரெட்டி போன்றவர்கள் ஆந்திரத்திலிருந்தும், சி. ஆர். ரெட்டி போன்றவர்கள் கன்னடத்திலிருந்தும், டாக்டர் நாயர் மலையாளத்திலிருந்தும், பி. டி. இராசன் போன்ருேர் தமிழகத்திலிருந்தும் வந்தவர்கள் ; இவர்களைப் போன்றவர்கள்தான் நீதிக் கட்சியின் பெருந்தலைவர்களாயிருந்தனர் ; பின்னர் நீதிக்கட்சி, 'உத்தியோக வேட்டைமட்டும் போதும் ; பதவி நாற்காலியே நோக்கம்,' என்ற போக்கில் சென்றதால்தான் நீதிக்கட்சி உருக்குலைந்தது.

"அந்தக் கட்சியிலிருந்து புடம்போட்டு எடுக்கப்பட்டவர்கள்தான், திராவிடர் இயக்கத்தவர்கள் ;

நீதிக் கட்சியை ஏழையின் கட்சியாக ஆக்கியிருக்கிருேம்—அவ்வளவுதான் ;

பின்பு, திராவிடர் கழகத்திலிருந்தும் நாங்கள் பிரிந்தவர்கள் ; புடம்போட்டு எடுக்கப்பட்டவர்கள் ;

"யார் எங்களுக்கு வழிகாட்டியோ, யார் எங்களுக்கு அரசியல் தந்தையோ அவரைவிட்டே நாங்கள் இன்று வெளியேறி தனியாக இயங்கி வருபவர்கள் நாங்கள் ;

"திராவிடர் கழகத்தை விட்டு தோளில் இருந்த துண்டுடன் வெளி

(4-ம் பக்கம் பார்க்க.)

## திரு-தமிழர் காங்கிரஸ் காங்கிரசுடன் இணைப்பு!

### பனம்பள்ளி மந்திரி சபை பதவி ஏற்றது

திருவனந்தபுரம், பிப். 14—

திரு-கொச்சியில் இன்று காங்கிரஸ் மந்திரிசபை பனம்பள்ளி கோவிந்த மேனன் தலைமையில் பதவி ஏற்றிருக்கிறது. இந்த மந்திரி சபையில் தோழர்கள் ஏ. ஜே. ஜான், கே. கொச்சுக்குட்டன், ஏ. ஏ. ரகீம், கே. ஐ வேலாயுதன் ஆகிய நால்வரும் உள்ளனர்.

ஐந்து பேர் கொண்ட இப்புதிய மந்திரிசபை 14-ந் தேதி மாலை பதவி உறுதி எடுத்துக்கொண்டது.

இப்போதைய மந்திரிசபையில் உறுப்பினராயுள்ள ஜான், பட்டம் மந்திரி சபைக்கு முன்னர் இருந்த காங்கிரஸ் மந்திரி சபையில் முதலமைச்சராக இருந்தவர்.

தோழர் கொச்சுக்குட்டன், ஜான் மந்திரிசபையில் நகராட்சி மன்ற அமைச்சராக இருந்தவர் ; தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்.

தோழர் கே. ஐ. வேலாயுதன் தொழிலாளர் இயக்கத்தைச் சேர்ந்தவர். இவர் சீத்தாராம் தொழிலாளர் காங்கிரசின் தலைவர்.

ஏ. ஏ. ரகீம் முஸ்லிம் வகுப்பைச் சேர்ந்தவர் ; இவர் மலையாள தினசரி ஒன்றின் நிர்வாக ஆசிரியராக இருந்தவர்.

இப்போது அமைக்கப்பட்டுள்ள காங்கிரஸ் மந்திரிசபைக்கு திரு-த. நா. காங்கிரசின் ஆதரவு இருக்குமென்று கூறப்பட்டது. இப்போது திரு-கொச்சி சட்ட சபையில் உள்ள பன்னிரண்டு தி. த. நா. காங்கிரஸ் உறுப்பினர்களும் காங்கிரசில் சேர்ந்துவிட தீர்மானித்துவிட்டார்கள் என்று தெரிகிறது.

இந்த முடிவு தி. த. நா. காங்கிரஸ் சட்டசபைக்கு வெளியே இயங்குவதைத் தடை செய்யாது என்று தோழர் நேசமணி குறிப்பிட்டார்.

மாநில புனரமைப்புக் குழுவின் முடிவுப்படி திரு-தமிழர் பகுதிகளை சென்னையுடன் இணைக்க வேண்டும் என்ற தீர்மானம் சட்டசபைக்கு வரும்போது அதற்குக் காங்கிரசின் ஆதரவைத் தேடவே இப்படி இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று நேசமணி மேலும் தெரிவித்தார்.

## நேரு - மெண்டே பிரான்ஸ் சந்திப்பு

இந்தியப் பிரதமர் பண்டித நேரு காமன்வெல்த் நாடுகள் மாநாட்டில் கலந்துகொண்டு திரும்பும் வழியில், பாரிசில் மெண்டே பிரான்சுடன் விமான நிலையத்தில் கலந்து பேசினார்.

இரண்டு பேரும் 90 நிமிட நேரம் பேசிக்கொண்டிருந்தனர்.

முன்னைய ஏற்பாட்டின்படி நேரு, பாரிசில் மூன்று நாட்கள் தங்குவதாக ஏற்பாடாகி இருந்தது ; ஆனல், மெண்டே பிரான்சின் மந்திரி சபை வீழ்ச்சியடைந்ததினல் அந்த ஏற்பாடு ரத்து செய்யப்பட்டது.

# நம் நாடு

[illegible] தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 14—2—1955 திங்கள்


## கன்னடத்தில் நமது பணி!

★

கர்ணுடகத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் பாராட்டத்தக்க முறையில் பணியாற்றி வருகிறது என்பதை அறிந்து நாம் அக மகிழ்ந்திருக்கிறேம்.

அண்மையில் பெங்களூரில் நடைபெற்ற கர்ணுடக மாவட்ட தி.மு. கழக மாநாடுகள் வெற்றிகரமாக நடைபெற்று இருக்கின்றன.

வடநாட்டு ஏகாதிபத்திய ஆட்சிப் பிடிப்பிலிருந்து விலகி, திராவிட நாட்டின் நல்வாழ்வை அமைக்க திராவிட மக்கள் நடத்தும் விடுதலைப் போரில் கர்ணுடக மக்கள் தங்கள் இதயங்கனிந்த ஆதரவைத் தர உறுதி கொண்டிருக்கிருர்கள் என்பதை பெங்களூர் மாநாடுகள் எடுத்துக் காட்டியுள்ளன.

தமிழகத்திலும், கேரளத்திலும் நமது இயக்கம் எதிர்ப்புகளுக்கிடையே வளர்ந்து, இன்று, மக்களின் பேராதரவுடன் இயங்கிவருகிறது. கர்ணுடகத்தில் பணியாற்றும் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், பல எதிர்ப்புகளுக்கிடையே இயக்கத்தை வளர்த்து வருகிருர்கள்; அந்த முயற்சியில் வெற்றியும் பெற்றிருக்கிருர்கள்.

பெங்களூரில் நடைபெற்ற மாநாடுகள் இரு முறைகள் ஒத்திப்போடப்பட்டன — மைசூர் மாநிலத்தில் நிலவிய சூழ்நிலை காரணமாக! ஆனல், கர்ணுடகத்தில் பணியாற்றும் தி.மு. கழகத் தோழர்கள் மனம் நொந்து போகவில்லை; அவர்களெல்லோரும் கொள்கையில் நீங்காப் பற்றும், கடமையைச் செய்வதில் தணியாத ஆர்வமும் கொண்டவர்கள். எதிர்ப்புகள் நேரிட்டாலும் அவற்றைக் கண்டு அஞ்சாது, உரிமையை நிலைநாட்ட உழைக்கும் பண்பு கொண்டவர்கள்; அவர்கள் முயற்சியைத் தடுக்கப் பலர் முயன்றும் மாநாடுகள் வெற்றிகரமாக நடைபெற்றன.

'கர்ணுடக தி. மு. கழக மாநாடுகளை தடை செய்ய வேண்டும்' என்று கோரினர்களாம், 'கருத்தை எடுத்துச் சொல்ல சுதந்திரம் அளித்திருக்கிறேம் அரசியல் சட்டத்தில்' —என்று வீண் பெருமை பேசுவோர் சிலர். மகஜர் கொடுத்தார்களாம்—ஆனல், மைசூர் மாநில சர்க்கார், இவர்களின் கோரிக்கைக்குச் செவி சாய்க்கவில்லை.

மாநாடுகள் நடைபெற்றன —சாதாரண முறையில் அல்ல —'கர்ணுடகத்தின் சரித்திரத்தில் இவை போன்ற பெரிய மாநாடுகள் நடைபெற்றதில்லை,' —என்று பெங்களூர் பத்திரிகைகள் பல பாராட்டும் அளவுக்கு நடைபெற்றுள்ளன.

இரண்டு நாள் மாநாடுகளிலும் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றிய முன்னணி வீரர்களும், மாநாடுகளுக்குத் தலைமை தாங்கியோரும், மாநாடுகளைத் துவக்கிவைத்த கழக முன்னணி வீரர்களும், திராவிட நாட்டுப் பிரிவினையின் அவசியத்தையும், வடநாட்டு ஏகாதிபத்தியம் தென்னுட்டைச் சுரண்டும் போக்கையும் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிருர்கள்.

மாநாடுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், கர்ணுடகத்தில் நமக்குள்ள ஆதரவைத் தெளிவாக எடுத்துக் காட்டும் பண்புமிக்குடையனவாயுள்ளன.

திராவிடநாட்டுப்பிரிவினை தீர்மானத்தை வழிமொழிந்து கன்னட மொழியில் பேசியபோது, மாநாட்டில் குழுமியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள்—தாய்மார்கள் உள்பட—தீர்மானத்தை வரவேற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பெங்களூரில் நடைபெற்ற மாநாடுகள் குறிப்பாக இரண்டு பிரச்சினைகளை வலியுறுத்துகின்றன; கர்ணுடகப் பகுதியில் திராவிட நாட்டுப்பிரிவினை கோரிக்கைபற்றி தவருன கருத்துக்களைக் கொண்டவர்கள் தெளிவு பெறுமாறு அவை பயன் தந்துள்ளன.

"சோஷலிசம் 'மாதிரி' ஒரு சமுதாயத்தை நிறுவுவது தான் காங்கிரசின் லட்சியம் என அண்மையில் நடைபெற்ற அனைத்திந்தியக் காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மான மானது, தொழிலாளர்—நடுத்தர மக்களிடையே உருவாகி வரும் முற்போக்கு சக்தியினை சிதைவுறச் செய்ய வடநாட்டு ஏகாதிபத்தியம் செய்யும் கண் துடைப்புக் காரியம் என இம்மாநாடு பொதுமக்களுக்கு எடுத்துக் காட்டுகிறது."

பெங்களூர் மாநாட்டில் நிறைவேறிய மேற்படி தீர்மானம், காங்கிரஸ் கட்சியினர் கூறும் சோஷலிசம் 'மாதிரி' சமுதாயம், தொழிலாளர்கள்— நடுத்தர மக்கள் ஆகியோரின் வாழ்வை முன்னேற்ற இயலாதது மட்டுமல்ல; காங்கிரசின் இக்காரியம், நாட்டில் உருவாகிவரும் மறுமலர்ச்சியைத் தடுத்து நிறுத்தும் போக்குடையது என்பதையும் நன்ருக வலியுறுத்திக் காட்டுகிறது.

மாநாடுகளை வெற்றிகரமாக நடத்தி நமது பாராட்டுதல்களைப் பெற்றிருக்கும் கர்ணுடக மாநாட்டு வரவேற்புக் குழுவினர், மேற்படி தீர்மானத்தை கர்ணுடக மக்களிடையே வலியுறுத்திப் பிரசாரம் செய்ய வேண்டும்.

"முதலாளிகளின் கைப்பொம்மையாக இருக்கும் காங்கிரஸ் கட்சி ஏழைகளுக்கு நன்மை செய்ய வகையற்றது," என்பதை, நாட்டு மக்களிடையே நல்ல முறையில் அவர்கள் பிரசாரம் செய்ய வேண்டும்.

தோன்றிய நாள் முதல் இன்றுவரை பணக் கோட்டையிலேயே குடியிருக்கும் காங்கிரஸ் இயக்கம், தனது முழு சக்தியையும் முதலாளித்துவத்தை வளர்க்கவும், வடநாட்டு மக்களின் வாழ்வை உயர்த்தவும் மட்டுமே செலவிட்டு வருகிறது என்ற உண்மையை கர்ணுடக மக்கள் உணருமாறு செய்ய வேண்டும்.

இன்று நாடு முழுவதிலும் காங்கிரசுக்கு எதிராகத் தோன்றியிருக்கும் ஜனநாயக எதிர்ப்பு இயக்கங்களை முறியடிக்கவும், ஏழை மக்கள் அந்த முற்போக்கு இயக்கங்களின் மீது கொண்டுள்ள நல்ல நம்பிக்கையை நாசப்படுத்தவும் காங்கிரசார், 'சோஷலிசம் மாதிரி' சமுதாயம் ஒன்றை அமைக்கப் போவதாகப் பிரசாரம் செய்கிருர்கள் என்பதை திராவிடத்தின் ஒரு பகுதியான கன்னடத்தில் வாழும் மக்கள் தெளிவாக அறியுமாறு நமது தோழர்கள் காரியமாற்ற வேண்டும்.

சோஷலிசம் 'மாதிரி' ஒரு சமுதாயத்தை அமைப்பதே எங்கள் நோக்கம்—என்று பிரசாரம் செய்யும் காங்கிரஸ் கட்சி, தனது ஆட்சிக் காலத்தில், வடநாட்டு மக்களின் உயர்வுக்கு மட்டுமே பயன்படுமாறு பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள், மின்சார வசதிகள், தொழில் துறை வளர்ச்சி ஆகிய அனைத்திலும் திட்டங்களைத் தீட்டி அமுலாக்கி வருகிறது என்பதையும், தென்னுட்டின் உயர்வுக்காக பெரிய திட்டங்கள் எதும் வகுக்காமல் திராவிடத்து மக்களைச் சுரண்டும் போக்கில் இயங்கி வருகிறது என்பதையும் நமது தோழர்கள் எடுத்துச் சொல்ல வேண்டும்.

திராவிட நாடு பிரிவினை ஒன்றுதான் கன்னட மக்களின் உயர்வுக்குகந்த திட்டம் என்பதை கன்னட மக்கள் உணருமாறு செய்து, திராவிட நாடு பிரிவினைக்கான விடுதலைப் போராட்டத்தில் கன்னட மக்களும் தங்கள் பங்கை செலுத்தக்கூடிய அளவுக்கு பேராதரவைத் திரட்டும் பணியில் தோழர்கள் ஏற்படலாம்.

இப்போது நடைபெற்ற மாநாடுகள், கன்னட மக்களிடையே, நாம் யார் என்பதையும், நமது கொள்கைகள் எத்தகையது என்பதையும் விளக்கிச் சொல்லும் முறையில் பயன்பட்டிருக்கின்றன. கர்ணுடக மாநிலத்தில் பணியாற்றும் தோழர்கள் தொடர்ந்து அவர்கள் ஆற்றும் நற்பணியின் மூலம், நமது பாதையில் கன்னட மக்கள் அனைவரையும் அழைத்துவரக் கூடும் என்பது உறுதி.

## தக்கர் பாபா வித்தியாலயம்

சென்னை, பிப். 14—

அண்மையில் சில தகராறுகளின் காரணமாக மூடப்பட்ட தக்கர் பாபா வித்தியாலயமும், அதைச் சேர்ந்த மாணவர் விடுதியும் மீண்டும் இன்று திறக்கப்படுகிறது. அப்பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள், மாநில அரிசன க்ஷேம அபிவிருத்தி டைரக்டர் மூலம் அனுப்பப்பட்டால் மீண்டும் பள்ளியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று பள்ளி நிர்வாகிகள் அறிவித்திருக்கின்றனர்.

## சீனர்கள் எச்சரிக்கை

சீனவை (மக்கள் சீனவை)த் தாக்க முன்வருவோர் எவராயிருந்தாலும் படு தோல்வி அடைந்து ஓட நேரிடும் என்று மாஸ்கோவிலுள்ள மக்கள் சீன தூதுவர் தெரிவித்திருக்கிருராம்.

## தபால் - தந்தி இலாகா திட்டத்தில் திராவிடம் புறக்கணிக்கப்படுகிறது

## சென்னை வட்ட ஊழியர்களுக்கு காலனிகள் கட்டப்படவில்லை

தபால்-தந்தி இலாகாவில் பணியாற்றும் தோழர்களுக்கென இந்திய சர்க்கார், இந்திய உப கண்டம் முழுவதிலும் வீடுகள் கட்டித் தருகிருர்கள்; ஆனல், இந்தத் திட்டத்திலும், இந்திய சர்க்கார் தென்னுட்டின்மீது மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்துகொள்கின்றனர். வட நாட்டில் ஆயிரக்கணக்கான வீடுகள் கட்டப்படுகையில், சென்னையில் பணியாற்றும் தோழர்களுக்கு எவ்விதமான வீடுகளும் கட்டப்படவில்லை.

'சென்னை ஊழியர்களின் நலன்' (Staff Welfare at Madras) என்ற தலைப்பில் வெளியிடப்பட்டிருக்கும் துண்டுப் பிரசுரம் ஒன்று, சென்னையில் பணியாற்றும் தபால்-தந்தி இலாகா ஊழியர்களுக்கு இந்திய சர்க்கார் இழைத்திருக்கும் அநீதியை எடுத்துக் காட்டுகிறது. அதன் விபரம் கீழே தரப்படுகிறது :—

### 1

இந்த ஆண்டில் அமைக்கப்பட்டவை :—

**டில்லி மாவட்டம் :**

புதுடில்லி : 'அஜ-மல் குரோவ்' எனுமிடத்தில் 4 காலனிகள்.

டில்லிகன்டோன்மென்ட் : 4-வது வகுப்பு காலனிகள்.

புதுடில்லி : 4 இரண்டு அடுக்கு வீடுகள் கொண்ட காலனிகள்.

புதுடில்லி : 'டி. பி. எஸ்.'-களுக்கான காலனிகள்.

டில்லி : 'பி' வகையான 150 காலனிகள்.

**பஞ்சாப் வட்டம் :**

ரூபார் : உயர் அதிகாரிகளுக்கான 3 காலனிகள்.

நூர்கான் : கம்பியில்லாத் தந்தி இலாகா உயர் அதிகாரிகளுக்கான காலனிகள்.

ரோடாக் : 'ஆர். எம். எஸ்.' ஊழியர்களுக்கென இரண்டு வகையான 4 காலனிகள்.

அம்பாலா : 40 காலனிகள்.

**உத்திரபிரதேச வட்டம் :**

கான்பூர் : 'எச்' வகையான 12 காலனிகள்.

டேராடூன் : 'பி. எம்.', 'எஸ்.பி.எம்.' களுக்கான காலனிகள்.

ஆக்ரா : 4 காலனிகள்.

கான்பூர் : 8 காலனிகள்.

**பிகார் வட்டம் :**

ராக்ஸால் : தபால் நிலையக் கட்டிடம் விரிவாக்கப்பட்டுள்ளது. குமாஸ்தாக்களுக்கென இரண்டு காலனிகள்.

**மேற்கு வங்க வட்டம் :**

பாகுலா : 2 காலனிகள்.

போர்ட்பிளேர் : கம்பியில்லாத் தந்தி இலாகா உயர் அதிகாரிகளுக்கான காலனிகள்.

**அசாம் வட்டம் :**

சிலாசார் : 4 'யூனிட்'டுகள் கொண்ட காலனிகள்.

**மத்திய இந்தியா வட்டம் :**

ஆஜ்மீர் : 'எஸ். டி. ஓ. டி.'-களுக்குத் தனியாகவும், 'லைன்மென்'களுக்கென 5 காலனிகளும்.

**சென்னை :**

இல்லை (இந்த ஆண்டில் எவையும் கட்டப்படவில்லை.)

### 2

இவ்வாண்டில் துரிதமாக நடைபெற்று முடிக்கப்பட இருக்கும் இடங்கள் :—

**அசாம் வட்டம் :**

ஷில்லாங் : குமாஸ்தாக்களுக்கு 30-யூனிட்டுகளும், 4-வது வகுப்பு அதிகாரிகளுக்கு 20 யூனிட்டுகளும்.

கோகிமா : தபால் நிலையமும், அதிகாரிகளுக்கான காலனிகளும்.

நெளகாங் : தபால் நிலையமும், 'எஸ். பி. எம்.' காலனிகளும்.

**உ. பி. வட்டம் :**

ஆக்ரா : 8 காலனிகள்.

அலகாபாத் : 4 காலனிகள்

டேராடூன் கன்டோன்மென்ட : 4-காலனிகள்.

பிசாபாத் : இரண்டு வகையான 8 காலனிகள்.

அசாம்கார் : இரண்டு வகையான 8 காலனிகள்.

மதுரா கன்டோன்மென்ட் : இரண்டு வகையான 6 காலனிகள்.

ஈடா : இரண்டு வகையான 4-காலனிகள்.

அன்வர்சஞ்ச் : 10 காலனிகள்

மீரட் : 6 காலனிகள்

கான்பூர் : 24 காலனிகள் (பழைய 'டி. ஓ.' வில்)

கோரக்பூர் : 4 காலனிகள் ('டி. ஓ.' வில்)

**மத்திய வட்டம் :**

அகோலா : 'எஸ். டி. ஒ. டி.'களுக்குத் தனியாகவும், 'பி. ஓ. எஸ்.' களுக்கு 8 காலனிகளும்.

நாகபுரி : 'ஏ. ஓ. டி. ஆர்'களுக்கென இரண்டு வகையான 65 காலனிகளும், ரெய்பூர், சாண்டுல், அகோலா காண்ட்வா, ஜபல்பூர் ஆகிய இடங்களில் மொத்தம் 23 காலனிகளும்.

ஜபல்பூர் : 24 காலனிகள்

**சென்னை :**

இல்லை.

### 3

அடுத்த ஆண்டில் கீழ்க்கண்ட இடங்களில் கட்டப்படுவதற்காக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

**டில்லி மாவட்டம் :**

புதுடில்லி :— (1) தாம்ஸன் ரோடில் 1 காலனி.
(2) வினய் நகரில் 48 காலனிகள்.
(3) வினய் நகரில் 'எச்' மாதிரியான 28 காலனிகள்.
(4) வினய் நகரில் 27 காலனிகள்.
(5) 134ம்எண்ணுள்ள நிலத்தில் 40 காலனிகள்.

**பஞ்சாப் வட்டம் :**

சிம்லா :— 6 காலனிகள்.

பதன்கோட் :— தபால் இலாகா அதிகாரிகளுக்கு காலனிகள்.

அம்பாலா :— 4-வது வகுப்பைச் சேர்ந்த 2 காலனிகள்.

பதன்கோட் :— 'ஆர். எம். எஸ்.' அதிகாரிகளுக்கென இரண்டு வகையான 15 காலனிகள்.

சோலான் :— தபால் அதிகாரிகளுக்கான காலனிகள்.

அம்பாலா :— இரண்டு வகையான 11 காலனிகள்.

**பம்பாய் வட்டம் :**

'டி. டி.' திட்டத்தின் கீழ் ஷோலாப்பூரில் 4 காலனிகள்.

பம்பாய் :— 'பி எல்.' அதிகாரிகளுக்கென, சாந்தாக்ரூஸ், வாடாலா இடங்களில் தங்குமிடங்கள்.

**பிகார் வட்டம் :**

கயா :— 'எஸ். டி. ஓ. டி.'களுக்கான தங்குமிடங்கள்.

**மே. வங்க வட்டம் :**

பாகுலா :— 2 யூனிட் காலனிகள்.

அசான்சோல் :— 3 காலனிகள்.

ஜல்பைகுரி :— 3 காலனிகள்.

பாந்வான் :— தபால் குமாஸ்தாக்களுக்கென 2 யூனிட் காலனிகள்.

கிருஷ்ணகர் :— 'ஹெய்ச்' மாதிரி 6 யூனிட் காலனிகள்; எஞ்சீனியரிங் டிவிஷன் ஊழியர்களுக்கு 2 யூனிட்டுகள்; அசான்சோலில், 'லைன்மென்'களுக்கென 2

(4-ம் பக்கம் பார்க்க)

# சாகநேர்ந்தாலும் சமூகப் பணி புரிவோம்!

## வரலாறு நமக்கு வாழ்த்துக் கூறும்

### ஆட்சிகளுக்கு அடிப்படை சமூகமே

### சமூக சீர்திருத்த மாநாட்டில் தோழர் எஸ்.வி.பதி வரவேற்புரை

"சமூகம் மானுபிமானம் இழந்து, பழமையெனும் உளைச் சேற்றில் தள்ளப்பட்டபோது, பகுத்தறிவெனும் கரையேற மார்க்கம் அறியாமல் தன் துக்கக் கரங்களை நீட்டி கண்ணீர் திவலைகளைச் சிந்திக்கொண்டிருந்தபோது, அதைக் காப்பாற்றிக் கரை சேர்க்க முன்வந்த அறிஞர்களில் சிலர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்; சிலர் தீயில் தள்ளப்பட்டிருக்கிறார்கள்; சிலர் தூக்கிலேற்றப் பட்டிருக்கிறார்கள்; சிலர் கல்லாலடிக்கப்பட்டிருக்கிறார்கள்; சிலர் கடுஞ்சிறையில் தள்ளப்பட்டிருக்கிறார்கள்; சிலர் கைகளில் விலங்கிடப்பட்டு, கண்கள் கட்டப்பட்டு, கானகத்தில் விடப்பட்டிருக்கிறார்கள்; இந்தக் கோர நிகழ்ச்சிகளைத்தான், இரத்த எழுத்துக்களால் காட்டிக்கொண்டே இருக்கிறது கடந்த கால உலக வரலாறு; எனினும், அதையே செய்ய நாம் துணிந்து முன்வந்திருக்கிறோம். ஏன்? அவர்கள் விட்டுச் சென்ற கொள்கைகள் வெற்றியைத் தேடித் தந்திருக்கிறது; நாம் சாக நேரலாம்—எனினும் நாம் அந்தப் பணியை விட்டோமில்லை."

"அறிவுக் கோட்டையின் கதவுகள் மெல்ல மெல்லத் திறக்கப்படுகிறது; அந்த அளவுக்கு, இடிந்துகொண்டிருக்கும் பழமையின் கோட்டைக் கதவுகள் மூடப்படுகின்றன; நம் நாடு சமுதாயத் துறையில் விடுபடுமானால், அந்தப் பெருமை, உள்ளபடியே மறுமலர்ச்சி இயக்கத்தாராகிய நம்மைத்தான் சாரும். அதை நாம் விரும்பி ஏற்றாலும், ஏற்காவிட்டாலும், வருங்கால உலகம் அதை நம் இயக்கத்திற்கு என்றுமழியாத சாசனமாக்கி விடும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை."

*—இவ்வாறு, 12—2—55 சனிக்கிழமை, பெங்களூர் பிளாக்பள்ளி உயர்நிலைப் பள்ளித் திடலில் நடந்த கர்நாடக தி. மு. கழக முதல் சீர்திருத்த மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் எஸ். வி. பதி அவர்கள், தமது வரவேற்புரையில் குறிப்பிட்டார்.*

மேலும் அவர் பேசியதாவது:—

"சென்னையை மையமாக வைத்து சுமார் 25 ஆண்டுகட்கு முன் தொடங்கிய நமது சீர்திருத்தக் கருத்துக்கள், மறுமலர்ச்சி இயக்கத்தின் பேரால், சட்டரீதியாக ஜனநாயக முறையில் அமைக்கப்பட்டிருக்கும் நமது திராவிட முன்னேற்றக் கழகக் கோட்டை வாயிலிலிருந்து முரசொலி கொட்ட முழங்கிப் புறப்படுவதைக் காண மகிழ்ச்சியடைகிறோம்.

உலக வரலாறெனும் மாலையில், முத்தும் பவழமும் போல் தோன்றிய பல சீர்திருத்தவாதிகள் பல நாட்களாக வருந்தி உழைத்துத் தந்த நற்கருத்துக்களை சில நயவஞ்சகர்கள் தங்கள் சுயநல எண்ணத்தால் அவைகளை மக்கள் மன்றத்திலே உலவ விடாமல் செய்திருக்கின்றார்கள். ஆனால், நம் நாட்டில்; அதுவும் இந்த இருபதாம் நூற்றாண்டில் மறுமலர்ச்சி என்றால் எத்தகையது, அதன் கொள்கைகளும் கோட்பாடுகளும் எவை என்பவைகளைக் கேட்க ஆயிரமாயிரம் தோழர்கள் மலர்ந்த முகத்தோடு குழுமியிருப்பதைக் காண உள்ளபடியே நெஞ்சம் நெகிழ்ந்து, உள்ளம் பூரித்து, இரு தோளும் இமயம்போல் — விந்தியம்போல் உயருகிறது.

'நாம் ஏன் சமுதாயத்தை சீர்திருத்த முனைகிறோம்.' என்ற கேள்விக் குறியின் பக்கத்திலே நின்றுகொண்டு ஆராய்ச்சி செய்தால், உலகம் நமக்களித்துள்ள பதில், 'சமுதாய விடுதலை இல்லையானால் அரசியல் விடுதலையடைந்தும் பயனில்லை,' என்பதுதான்.

மனிதன் எப்படி வாழ்ந்தான் என்பதை எண்ணாமல், எப்படி வாழ வேண்டும் என்பதை முடிவு கட்ட முடியாது. நடந்ததை மறப்போம் என்ற கொள்கை ஒரு சிலவற்றிற்கு உகந்ததுதான்; ஆனால், இதுகாறும் சமூகத்தின் பேரால், மதத்தின் பேரால், ஆண்டவன் பேரால் மக்கள் தலைமேல் ஏற்றி வைக்கப்பட்டிருக்கும் பழிச்சுமையை இறக்க வேண்டுமானால், இறந்தகால எண்ணங்களை, நடவடிக்கைகளை எண்ணிப் பார்க்காமல், எதிர்காலத்திற்கு வேண்டிய பரிகாரத்தைத் தேடுவதென்பது இயலாத காரியம்; ஆகவேதான், நாம் கடந்து வந்திருக்கிற பயங்கரமான பாதைகளை எண்ணி, செம்மையானதோர் சீர்திருத்தப் பாதையை வகுக்க வேண்டியவர்களாகிறோம்.

நிலப் பிரச்சினையையும், பணப் பிரச்சினையையும், ஆளும் பிரச்சினையையும் அலசிப் பார்க்கும் பல கட்சிகளும், கழகங்களும் நம் நாட்டில் இயங்கிக் கொண்டுதானிருக்கின்றன. அவற்றிற்கெல்லாம் மேலாக, நாம், ஒவ்வொருவருடைய மனப் பிரச்சினையையும் அலசிப் பார்த்துக்கொண்டிருக்கிறோம்; ஏனெனில், நிலப் பிரச்சினையைவிட, பணப் பிரச்சினையைவிட, ஆளும் பிரச்சினையைவிட, மனப் பிரச்சினை மகா கடினமானது. மேற்சொன்ன மூன்றுவித விடுதலையையும் நாம் எளிதில் அடைந்துவிடலாம்; ஆனால், நம் நாட்டு மதக் கோட்பாட்டின்படி ஒருவன் மன விடுதலை அடைவதென்பது அவ்வளவு எளிதானதல்ல.

அழுக்கையெல்லாம் தான் இழுத்துக்கொண்டு, தான் வாழும் தண்ணீரைத் தூய்மைப்படுத்தும் பாசிபோல், எதிரிகளால், சர்க்காரால், மதவாதிகளால் ஏற்படுகிற எல்லாவிதத் துன்பங்களையும் நாம் ஏற்றுக்கொண்டு, சமுதாயத்தைத் தூய்மையாக்குகிறோம்; இதில் கேலிக்கோ, கிண்டலுக்கோ இடமில்லை.

எதைச் சொன்னால் மக்கள் வெறுப்படைந்து, நம் கட்சியில் சேராமல் போய்விடுவார்களோ என்று பயந்து, பல கட்சிகள் தொட பயப்பட்ட கருத்துக்களையே நாம் தொட்டு, மக்களுக்குக் காட்டியிருக்கிறோம்; அதனால் நம் கழகம் அழிந்துவிடவில்லை; அருகிவிடவுமில்லை; மாறாக, மிக வேகமாக வளர்ந்திருக்கிறது. இதிலிருந்தாவது மற்ற கட்சிக்காரர்கள், சீர்திருத்த நோக்கங் கொண்டோர் நல்லதோர் படிப்பினையைப் பெற்று, நம்மோடு தோள் தொட நின்று பணியாற்ற முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

காலுக்கும் கைக்கும், செவிக்கும் வாய்க்கும் விடுதலை கிடைத்துப் பயனில்லை எண்பத்திற்கு விடுதலை கிடைக்கவேண்டும். இதையே அண்டமுகட்டிலிருந்து ஆவேசமான குரல் எழுப்பினார்கள்.

'இருட் சிறையா?—இதோ செல்கிறேன்; ஆனால், என்றாவது ஓர் நாள், இவ்வுலகம் உருண்டை என்ற என் கருத்தை உண்மையென ஒப்புக்கொள்ளும்,' என்று சிறைக்குள்ளே சென்றான், இத்தாலிய அறிஞன் கலிலியோ; 'உலகம் தட்டை' என்று சாதித்துவந்த பைபிளின் பழைய ஏற்பாடுகளும், புதிய ஏற்பாடுகளும், இன்று வெட்கித் தலைகுனிந்து மௌனம் சாதிக்கின்றனர்!

'மானாத கொள்கைக்காக மாள்கிறேன்,'—என்றான், கிரேக்க ஞானி சாக்ரடீஸ்; மாண்டது அங்கே மதம்!

'என் பேனா எரியீட்டி,'—என்றான் வால்டேர்; எரிந்தது மன்னன் உடல்—மணிமுடி—மணிமாடம்—செங்கோல் எல்லாம்!

'என் கருத்துக்கள் எரிமலை,'—என்றான் ரூசோ; அந்த எரித்தீயில் உருகி ஓடியது, பாஸ்டில் எனும் பயங்கரச் சிறையின் இரும்புக் கதவுகள்!

'நான் நாத்திகன்,'—என்றான், பகிரங்க மேடையிலே இங்கர்சால்; ஆத்திகர்கள் கூடி ஆயிமாயிரம் பொற்காசுகளை அவன் காலடியிலே குவித்தார்கள்!

'கருஞ் சட்டைப் படையால் கலக்குவேன்,'—என்றான் மாஜினி; கலங்கியது ரோம் சாம்ராஜ்யம்!

'வெள்ளை மாளிகைக்குள்ளே நான் போக நேர்ந்தால்......' என்று தன் இளமையிலே மனதுக்குள் சொல்லிக்கொண்டான்; அந்த வாய்ப்பு அவனுக்குக் கிடைத்தபோது, தன் வெள்ளை உள்ளத்தைத் திறந்து அடிமைகளின் விலங்குகளை உடைத்தெறிந்தான் ஆபிரகாம் லிங்கன்!

இவர்களைப் போலவே, புரூனோ, ஜான் வில்லியம், ஜான் பாட்லி, அடாடர்க், முஸ்தபா கமால் பாட்சா போன்ற சீர்திருத்த வாதிகள் நம் வணக்கத்துக்குரியவர்—என்று சொல்லிக்கொண்டு, அத்தகு மேதைகளின் வரலாறுகளை நீங்கள் கேட்பதற்காகவே இந்த சீர்திருத்த மாநாடு கூட்டப்பட்டிருக்கின்றது—என்று சொல்லிக்கொண்டு, இத்தகைய மாநாட்டிற்குப் பழைய சீர்திருத்தத் தோழரும், காஞ்சி தந்த செல்வமுமான அருமை நண்பர் காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்களை தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்."

## டாச்சென் தீவுகள் விடுதலை பெற்றன?

டாச்சென் தீவுகளைத் தங்கள் படையினர் விடுதலை செய்துவிட்டதாக மக்கள் சீனா அறிவித்துள்ளதாம்.

டாச்சென் தீவுகளில் மக்கள் சீன இராணுவத்தின் முன்னணி கோஷ்டியினர் பிரவேசித்துவிட்டன என்றும், இத் தீவிலிருந்து, தேசியச் சீன (சியாங்) படையினர் காலி செய்து வெளியேறிவிட்டனரென்றும் செய்திகள் அறிவிக்கின்றன.

மக்கள் சீனப்படை உள்நுழைந்ததும், டாச்செனில், செஞ்சீனக் கொடியை பறக்கவிட்டதாம்.

## ரஷ்ய யோசனை: யு. எஸ். நிராகரிப்பு?

இந்த மாதத்தில், ஷாங்காயிலோ, புதுடில்லியிலோ, பார்மோசா குறித்து 10 நாடுகள் மாநாடு நடைபெற யோசனை கூறியிருப்பதாக ரஷ்யா அறிவித்தது.

சோவியத் ரஷ்யாவின் இந்த யோசனையை அமெரிக்கா நிராகரிக்குமென்று தெரிய வருகிறது.

மாநாட்டுக்கான அழைப்புக்களை அனுப்பும் நாடுகளில் ஒன்றாக அமெரிக்கா சேர்க்கப்படாததையும், மாலடோவ் தொடர்ந்து, அமெரிக்கா ஆக்கிரமிப்புச் செயல்களில் ஈடுபட்டு வருவதாகக் குற்றம் சாட்டுவதையும் அமெரிக்க அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனராம்.

# கொள்கை வளர்ப்போம் இலட்சியம் காப்போம்

## ஆதிக்கப் பிடி அகல, சுதந்திர திராவிடம்காண கன்னடியர் திரள்வர்

### அரசியல் மாநாட்டில் உசேன் வரவேற்புரை

"நாமோ மிகச் சாமானியர்கள்; நமக்குரிய பணியோ மிக மிகப் பெரியது; நம்மிடம் அவ்வளவு பொருளாதார வசதி ஏது என்று பேசப்பட்டது. நாம் சாமானியர்கள்தான்; நம்மிடம் பொருள் வசதி இல்லை என்பதும் உண்மையேதான்; ஆனால், இந்த சாமானிய ஏழைகள் இதுவரையில் சாதித்தவற்றை எண்ணிப்பார்க்க வேண்டுகிறேன். தி. மு. கழகம் சீமான்களுக்காகப் போடப்பட்டிருக்கும் சோபா ஆசனமல்ல; நமக்குத் தெரியாதா, இது, ஏழைகள் சேகரித்த செப்புக் காசுகளாலும், அவர் தம் சலியா உழைப்பாலும் அமைக்கப்பட்ட அறிவுக் கோட்டை என்று! தி. மு. கழகம் பணக்காரர்களின் கஜானாவை நம்பி என்றும் வாழ்ந்ததில்லை—இனி வாழப் போவதுமில்லை; எனவேதான் கூறுகிறேன்—அண்ணாவின் அறிவுப் படை ஒருக்கால் ஏழையாக இருக்கலாம்; ஆனால், அது கோழையாக எக்காலும் இருக்காது."

"கண்ணியம், கட்டுப்பாடு, கடமை உணர்ச்சி இவைகளை அடிப்படையாகக் கொண்டு பயிற்சி தரப்பட்ட அறிவுப் படை பணிக்களம் நோக்கிப் புறப்பட்டது; ஐயப்பாடுகள் அகன்றன; இதோ இந்தப் பொன்னாளன்று, பரந்த கடல் அளவிலே, மாவீரன் மஜீத் பந்தலிலே, சீர்திருத்த மேதை கைலாசம் அரங்கிலே கூடி இருக்கிறோம்; உங்கள் திருமுகங்களைக் காண என் உள்ளமெல்லாம் பூரித்து வீங்குகிறது; தோழர்களே! என் வாழ்விலே என்றுமே பெறாத மகிழ்ச்சி இன்று நான் பெறுகின்றேன்; திராவிடத்தின் விடுதலைக்கு பிரம்மாண்டமானதோர் படை திரண்டு நிற்பதைக் காண கண்கள் குளிர்கின்றன; இன்னமும் யாருக்காவது சந்தேகமிருந்தால் நான் அவர்களுக்குக் கூறுகிறேன்—அறிந்தோ, அறியாமலோ நம்மைப்பற்றி உங்கள் உள்ளத்திலே வளர்ந்துள்ள அழுக்காற்றை துடைத்துக்கொள்ளுங்கள்; நம்மைச் சரியாகப் புரிந்து கொள்ள முயலுங்கள்'—என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

"திராவிட முன்னேற்றக் கழகம் கள்ளியும் காளானும் நிரம்பிய காடல்ல; அது ஓர் அழகான மலர்ச்சோலை; அந்தச் சோலையிலிருந்து வீசும் தென்றல், சமூகத்தைப் பிடித்தாட்டும் பிற்போக்கு என்ற நோயை நிச்சயமாகப் போக்கும்; கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னாள், திராவிடர், 'திராவிடம் நமது நாடு' என்று நாம் கூறியபோதெல்லாம், நம்மைத் தூற்றினார்கள்; 'திராவிடர்' என்று சொன்னதும், ஏதோ உலகத்திற்கே அழிவு வந்துவிட்டது போல் எண்ணி நம்மீது கல்லை வீசி எறிந்தனர்; கண்டனங்கள் பறந்தன; சீர்திருத்தம் பேசக்கூடிய நாம், வெளியில் நடமாடுவதே அச்சத்திற்குரிய ஒன்றாக இருந்தது அன்று; இப்போது நிலைமை அதுவல்ல; இஸ்லாம் மதத்திலே பிறந்த நானும், கிறித்துவமதத்திலே பிறந்த நண்பர் பிரான்சிசும், இந்து மதத்திலே வந்த பல நண்பர்களும், நம்மை திராவிடர்கள் என்று ஒப்புக்கொண்டுதான் தி. மு. கழகத்தில் பணியாற்றி வருகிறோம்; இதனால் நாம் கெட்டுவிட்டதாக யாராவது கூற முடியுமா? அன்று நமக்குற்ற இன்னல்களை எல்லாம் பொறுமையுடன் ஏற்றுக்கொண்டோம். அந்தப் பொறுமையின் பலன் தான் இந்த மாநாடு, மக்கள் கடல், மகிழ்ச்சி வெள்ளம் எல்லாம்; அவர்கள் நினைத்தது போல் நாம் அழிந்துவிடவில்லை—மாறாக வளர்ந்து விட்டோம்; வைதிகப் பாணியில் கூற வேண்டுமானால், ஆண்டவனே நம்மை வளரவிட்டிருக்கிறார்—'இப்பொழுதாவது இந்த நாடு இவர்களால் நல்ல நிலை எய்தட்டும்'—என்பதற்காக!"

*இவ்வாறு, 13—2—55ல், பெங்களூரில் நடைபெற்ற கர்நாடக தி. மு. கழக முதலாவது மாநாட்டில் வரவேற்புரை ஆற்றுகையில், தோழர் எஸ். ஜே. உசேன் அவர்கள் குறிப்பிட்டார்.*

"நேற்று காலை முதல் இங்கே நடைபெற்றுவரும் நிகழ்ச்சிகளை எல்லாம் நீங்கள் கண்டும்—கேட்டும் வருகிறீர்கள்; இன்னிசை விருந்து இங்கே தரப்பட்டது—இசை என்றால் எதுகை மோனையின் அமைப்பும், சுருதி சரியாக இருக்கிறதா என்று பார்த்தால் மட்டும் போதாது; இசை மூலம் ஏதேனும் பயனுள்ள கருத்துக்கள் கூறப்படுகிறதா என்பதைத்தான் கவனிக்க வேண்டும்.

மனிதனின் வெளித்தோற்றத்தை விட அகத்தை கவனிக்க வேண்டும் என்று கூறுவார்கள். அது போலவே திராவிட முன்னேற்றக் கழக இசையிலே கவர்ச்சி மட்டுமல்ல—நல்ல நாதமும் இருப்பதைக் காணலாம்.

அடுத்து, சொல்லின் செல்வர்கள், சிறந்த பல கருத்துக்களைத் தேன் தமிழோடு கலந்து விருந்து சமைத்தார்கள்; அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு ஒவ்வொன்றும் நெளிந்துபோன உள்ளங்களையும் நிமிர்த்துவதாக இருந்தது! மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இந்த சமுதாயத்துக்கு பிடித்த சனியன் இன்றோடு தொலைந்துவிடுமோ என்று எண்ணும் விதத்திலே சொல்மாரி பொழிந்தனர்! குன்றிவிட்ட தன்மான உணர்ச்சி மீண்டும் குருத்துவிடத் தொடங்கிவிட்டது! சமுதாய முன்னேற்றத்திற்கு அவர்கள் அமைத்துத்தந்த படிக்கட்டுகளைவிட சிறந்தவை வேறு யாரால் செப்பனிட முடியும்?

நல்ல கருத்துக்கள், முதலில் மக்களால் உதாசீனம் செய்யப்பட்டாலும், அந்தச் சமுதாய சந்ததியினர் மெல்ல மெல்லச் சிந்தித்து இறுதியில் ஏற்றுக்கொள்ளத்தான் செய்கிறார்கள். அத்தகு பொன் கருத்துக்களை வழங்கிய வழிகாட்டிகளின் வாழ்க்கை வரலாற்றை நேற்றெல்லாம் கேட்டீர்கள்.

ஆனால் நமக்கு அரசியலிலே உள்ள அந்தஸ்து என்ன என்று எண்ணும்போதுதான் கர்நாடக திராவிட முன்னேற்றக் கழக மாநாடு, மலடா என்று சந்தேகிக்கப்பட்ட தாய்க்குப் பிறந்த குழந்தையைப் போன்றதாகும்.

"பெரியார் நகரத்திலே பதின்மரும், அக்கிப்பேட்டையிலே ஐவரும் இந்த இயக்கத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லோரும் ஏழைகள்," இப்படிப் பேசப்பட்டது உண்மைதான்; நாம் அனைவருமே ஏழைகள்; பணக்

(4-ம் பக்கம் பார்க்க)

# ஏகாதிபத்திய முனைப்பு!.....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வந்த நாங்கள், இன்று, கழகத்திற்கென சொந்தத்திலே கட்டிடமும், பத்திரிகைகள் கொண்டவர்களாகவும், பிச்சைக்காரர்களாகிய நாங்கள் தஞ்சைப் புயல் நிவாரண நிதிக்கு ரூ. 25,000 தந்தவர்களாகவும் இருக்கிறோம்; இப்படி, இவ்வளவு குறுகிய காலத்தில், தி. மு. கழகம் தமிழ் நாட்டில் வளர்ந்திருப்பதற்குக் காரணம், நாட்டின் பல்வேறு பிரச்சினைகளுக்கு நாங்கள் காட்டும் காரணங்கள்தான் சரியானவை என்ற உண்மையை அவர்கள் புரிந்துகொண்டிருக்கிறார்கள்.

அதைப்போலவே கன்னட மக்களும் இந்த இரண்டு நாள் மாநாட்டிலும் நாங்கள் பேசியனவற்றைக் கேட்டு ஓரளவு நம்மைப் புரிந்துகொண்டிருப்பார்கள் என்றும், ஆதரவு தருவார்கள் என்றும் நம்புகிறேன்.

*" சிலர் சந்தேகப்படுகிறார்கள்—' பாகிஸ்தான் பிரிவினை சீக்கிரமாக நடைபெற்றதே; திராவிடப் பிரிவினை மட்டும் இப்படி காலந்தாழ்ந்து சென்று கொண்டிருக்கிறதே '—என்று.*

" பூகோளப் படத்தில் புதியதோர் நாட்டின் பெயரினைப் பொறித்த மாவீரன் ஜின்னா ஒரு முறை சென்னையில் விருந்தொன்றிற்கு வந்திருந்தார்; 23 பேர்கள் மட்டும்—முத்தையா செட்டியார், முத்தையா முதலியார் போன்றவர்கள் உள்ளிட இருந்தோம்—அப்போது ஜின்னா அவர்கள், பெரியாரிடம் திராவிட நாடு பிரிவினை பற்றிக் கேட்டபோது, பெரியார் அவர்கள் கூறினார்கள்—' உங்கள் முஸ்லிம் இனத்தைப்போல் அல்ல, இங்குள்ளவர்கள்; இங்கே, கூடியிருக்கிற 23 பேர்களும், 23 வேறு வேறு வகுப்பைச் சார்ந்தவர்கள்; முஸ்லிம்களைப் போல, கராச்சியிலிருந்து, ' பாகிஸ்தான் ஜிந்தாபாத் ' என்றால், தென் கோடியிலிருக்கும் முஸ்லிமும், ' பாகிஸ்தான் ஜிந்தாபாத், ' என்று கூறுவார்கள்; அந்த ஒற்றுமை இங்குள்ளோரிடம் இல்லை; எனவேதான், திராவிட நாடு இன்னும் அமையாமலிருக்கிறது '—என்று!

*" இந்த நாட்டு மக்களிடையே—திராவிடர்களிடையே இன ஒற்றுமையை உருவாக்குவதில்தான் கடந்த 25 வருட காலமாக சுயமரியாதை இயக்கம் பணி புரிந்து வந்திருக்கிறது; அந்த ஒற்றுமையில்தான்—சாதி பேதமற்ற அடிப்படையில் தான் நாம் சமுதாயத்தைப் படைக்க வேண்டும் என்று முயற்சித்து வருகிறோம்; இப்போதுள்ள இளைஞர் சமுதாயம், நாளை, வளர்ந்து பெரியவர்களாகும்போதுதான் நமது பணியின் பெருமையை அறிவர்.*

" நாம் இப்போது செய்துவரும் சமுதாயப் பணி, உழவு வேலை செய்வதைப்போன்றது; உழவு வேலை செய்யும்போது பலன் தெரியாது; உழுது, விதைத்து, களை எடுத்து, நீர்ப்பாய்ச்சி, காவல் காத்துவந்தால், நிச்சயம் பச்சைப் பயிர் வளரும்—பலன் தரும்; அதைப்போன்றே, இப்போது நாம் செய்யும் பணி மேலும் வளர்ந்து எதிர்காலத்தில் நிச்சயம் பலன் தரும்; நாம் இந்த உழவு வேலையை மட்டும் பதம் கெடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

" திராவிடம் அமைவதில், யாருக்கும் சந்தேகமிருக்கத் தேவையில்லை; ஏனெனில், வடநாடும், தென்னாடும் எப்போதும் ஒன்றாயிருக்க முடியாதவை.

" வட நாட்டில் எத்தனைதான் ஒற்றுமைக் கீதம் பாடினாலும், ஒற்றுமையை நிலைக்க வைக்க முடியாது.

" இந்தியாவிலேயே கடைசி சமரசத் தூதர் பண்டித நேருவாகத்தான் இருக்க முடியும்; அவருக்குப் பின் இந்தியத் துணைக்கண்டம், இந்துமத வெறியர்களின் கையில் சிக்கிச் சீரழியப் போகிறது.

*" நானும் பெரியார் ராமசாமி அவர்களும் வட நாட்டிற்கு ஒரு முறை சென்றிருந்தோம்; லாகூரில் உள்ள ஜும்மா மசூதியைப் பார்க்கச் சென்றிருந்தோம்; தாஜ்மகாலுக்கு அடுத்தபடியாக அழகு மிகுந்தது என்று கருதப்படுவது ஜும்மா மசூதி; எங்களுக்கு அதனைக் காட்டி வருவதற்காகக் காலஞ்சென்ற பேராசிரியர் எம். என். ராய், எம்.ஏ. பட்டதாரிகளான இரு இளைஞர்களை எங்களுடன் அனுப்பி வைத்திருந்தார். ஒருவர் முகம்மதியர்; இன்னொருவர் இந்து; ஆனாலும், இருவரும் எம்.ஏ. படித்த பட்டதாரிகள்; அந்த மசூதி உத்திரத்தில் 5, 6 துவாரங்கள் இருந்தன; ' இந்தத் துவாரங்கள் ஏன், ' என்று ஒருவரைக் கேட்டேன்; அவர் என்னைத் தனியாக அழைத்துச் சென்று, ' இந்தத் துவாரங்கள் இருக்குமிடத்தில், மசூதியைக் கட்டிய முகலாயர்கள் நவரத்தினக் கற்களைப் பதிப்பித்திருந்தனர்: பின்னர் வந்த இந்து மன்னர்கள் அவற்றை எடுத்துக்கொண்டுவிட்டனர், ' என்று கூறினார்—அவர் முகம்மதியர்; மற்ற இரண்டாவது இளைஞரைக் கேட்டேன்—' ஏன் இந்தத் துவாரங்கள் ' என்று; அவர் கூறினார்—' முகம்மதிய மன்னர் கட்டிய இந்த மசூதியை, பாதுஷாக்களால் கட்டிக் காக்க முடியவில்லை; அதுதான் பாழடைந்துவிட்டது, '—என்று! அவர் இந்து; இந்த சில துவாரங்கள் இந்த இரண்டு இளைஞர்களுக்கும் வெவ்வேறு காரணங்களைக் கூறுகின்றன—* **இதுதான் வட நாடு!**

*" பிரம்மபுத்திரா நதியைக் கடந்து, கௌஹாத்தி செல்வதற்காக நாங்கள் நீராவிப் படகொன்றில் போய்க்கொண்டிருந்தோம்; அப்போது தேநீர் அருந்த ஒரு கடைக்குச் சென்றேன்—படகிற்குள்ளேயே; அப்போது அந்தத் தேநீர் கடைக்காரர், எதிர்க்கடைக்காரரிடம் செல்லுமாறு கூறினார்; நான் திகைத்துபோய், ' ஏன் ' என்று கேட்டேன். அதற்கு அவர், ' நீங்கள் இந்து; நான் முஸ்லிம்; நான் உங்களுக்கு தேநீர் தந்தால், நீங்கள் போனபிறகு, எதிர்த்தாற்போல் உள்ள இந்து தேநீர் கடைக்காரர் என்னுடன் சண்டைக்கு வருவார், ' என்று கூறினார்;* **இதுதான் வடநாட்டின் நிலை!**

*" இந்த நிலையில் உள்ள வடநாடுதான் நேரு பண்டிதரிடம் உள்ளது; எத்தனை காலத்திற்கு நேரு, சமரசத் தூதுவராகவே இருக்க முடியும்?*

*" காஷ்மீரின் சரித்திரம் நமக்கு என்ன சொல்கிறது? ஷேக் அப்துல்லா நேரு பண்டிதரின் நெருங்கிய நண்பர்; ' ஒருவரைப் பார்த்தால் மற்றவரைப் பார்க்க வேண்டாம், ' என்று கூடச் சொல்வார்கள்: ஆனால், எதுவரையில்? நேரு கிழித்த கோட்டினைத் தாண்டாத வரையில்தானே அந்த நிலை இருந்தது? பிறகு? ஷேக் அப்துல்லா இப்போது எங்கே? சிறைச்சாலையில் விசாரணை இன்றிக் காவலில் உள்ளார். அதே போலவே, இப்பொழுது பக்ஷி குலாம் காட்சியளிக்கிறார்; நேரு கிழித்த கோட்டினைத் தாண்டினால் அவர் நிலையும் அப்படித்தான் முடியும்.*

" தென்னாட்டில் உள்ள முஸ்லிம்களில் பலர், ' காங்கிரசுடன் சேர்ந்து வாழ்வதே நல்லது, ' என்று கூட நினைக்கிறார்கள்; அவர்கள் கூட, ' ஷேக் அப்துல்லாவைவிடவா நாம் காங்கிரசுடன் சேர்ந்து வாழ முடியும்? ' என்று எண்ணிப்பார்த்தால், ' வடநாடு ஏகாதிபத்திய உணர்ச்சி கொண்டது, ' என்ற உண்மை புலப்படும்.

" இங்குள்ள முகம்மதியர்களும், கிறிஸ்துவர்களும் அரேபியாவிலிருந்தும் ஜெருசலத்திலிருந்தும் ஓடிவந்தவர்களா, அல்லது இறக்குமதி செய்யப்பட்டவர்களா என்றால், இல்லையே? இந்த நாட்டிலே நிலவிய சமுதாய இழிவைத் தாளமாட்டாமல் மதம் மாறியவர்கள்தானே அவர்கள் எல்லாம்? எனவே, அவர்களும் திராவிடர்கள் என்ற இன உணர்வு கொள்ள வேண்டும்; வடநாட்டவரின் ஏகாதிபத்தியப் போக்கினைப் புரிந்துகொள்ள வேண்டும்.

" மத வெறி கொண்டலையும் வட நாட்டவர்களுடன், முற்போக்கு எண்ணமும் பண்பும் கொண்ட நாம்—தென்னாட்டவர்கள்—திராவிடர்கள் ஒன்றி எப்படி வாழ முடியும்?

*" தென்னாட்டு வளங்களை வட நாடு எப்படி எல்லாம் கொள்ளையிடுகிறது; தென்னாட்டு மக்கள் வடவர்க்கு எப்படி அடிமையாக்கப்படுகிறார்கள் என்பதை இங்கு பேசிய கழகத் தோழர்கள் விளக்கிக் கூறினார்கள். அந்தக் காரணங்களில் எதைத் தவறெனக் கூற முடியும் "*

*" எனவே, தி. மு. கழகத்தின் இலட்சியமான ' திராவிட நாடு திராவிடருக்கே ' என்பதை கன்னட மக்கள் வெகுவாக எண்ணிப் பார்த்து, அதற்கு நல்ல ஆதரவை நல்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். "*

*தொடர்ந்து பொதுச்செயலாளர் அவர்கள், கழகத்தின் சமுதாயக் கொள்கை குறித்து விளக்கம் தருகையில் ' ஒருவனே தேவன் ' என்ற நிலைக்கு மக்கள் இழுத்துவரப்பட வேண்டும் என்று எடுத்துக்காட்டினர்.*

# கோவை வரும் தி. மு. க. பொதுக் குழு உறுப்பினர்கட்கு

" 20-2-55 அன்று, கோவை நகரையடுத்துள்ள பேரூரில் நடைபெறும் தி. மு. கழகப் பொதுக் குழுக் கூட்டத்திற்கு வரும் உறுப்பினர்களுக்கு பேரூரிலேயே தங்க, குளிக்க இட வசதியும், 20-ந் தேதி காலை முதல் உணவு ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் இதை பயன்படுத்திக் கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

" 20—2—55 காலை 5 மணி முதல், கோவை இரயில் நிலையத்தில், பொதுக் குழுக் கூட்டத்திற்கு வரும் உறுப்பினர்களை வரவேற்க தொண்டர்கள் தயாராக இருப்பார்கள். முன்னதாகவே வரும் தோழர்கள் அறிவித்தால், இரயில் நிலையத்திற்கு தொண்டர்கள் வருவார்கள், "

*என்று, கோவை நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் அ. பழனிசாமி அறிவிக்கிறார்.*

*(கோவை இரயில் நிலையத்திலிருந்து பேரூர் டவுன் பஸ் ரூட் நெ. 2, 9, 14.)*

## தமிழ் மாணவர் கழகம்
## 10-ம் ஆண்டு தமிழ் வார விழா

*16—2—55 மாலை 4 மணிக்கு, பிரம்பை, இராவ்பகதூர் கலவல கண்ணன் உயர்நிலைப் பள்ளி தமிழ் மாணவர் கழகத்தின் பத்தாம் ஆண்டு தமிழ் வார விழா, மேற்படி பள்ளியில், ' இயல் நாள் ' நிகழ்ச்சி திரு. கே. ஆர். எஸ். இராசாராமன் தலைமையில் நடைபெறும். திரு. தில்லைக் கோவிந்தன் பேசுவார்.*

*17—2—55 மாலை 4 மணிக்கு, மேற்படி விழாவின் ' இசை நாள் ' நிகழ்ச்சி, திரு. பசுபதி தலைமையில் நடைபெறும். திருவாளர்கள் நாரண துரைக்கண்ணன், கா. அப்பாதுரை ஆகியோர் பேசுவர்.*

*18—2—55 மாலை 4 மணிக்கு, மேற்படி விழாவின் ' நாடக நாள் ' நிகழ்ச்சி, திரு. உலகநாதன் தலைமையில் நடைபெறும். தோழர் கண்ணதாசன் பேசுவார்.*

# கொள்கை வளர்ப்போம்! இலட்சியம் காப்போம்!!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

*காரர்கள் ஒரு காலத்தில் இருந்தார்கள்; பதவி நம் கட்சியிலே ஒன்றுமில்லையென்று தெரிந்ததும், நாம் புரட்சிப் பாதையை நோக்கிப் போகிறோம் என்று தெரிந்தவுடன், பக்குவமாக அவர்கள் ஒதுங்கிவிட்டனர்.*

*பட்டதாரிகளும் நம்மோடு ஒரு குறிப்பிட்ட காலம் இருக்கத்தான் செய்தார்கள். ' நம்மீது ஆரியர்களால் ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் ஏற்றி வைக்கப்பட்டிருக்கும் இழிவான பட்டத்தைவிட, வெள்ளையர் கொடுத்த பட்டம் மேலானதா? ' என்று கேட்டோம். அவர்கள் திசை தெரியாமல் ஓடி மறைந்தார்கள்.*

*' மாநாடு கூட்டப் போகிறோம், ' என்று கூறினோம்நாம்; ' இதுகளால் முடியக் கூடிய ஒன்றா? ' என்றனர் மாற்றுக் கட்சியினர்; மக்கள், சந்தேகக் கண்களோடு பார்த்தனர் நம்மை; நம்மிலே பலருக்கு ' மாநாடு நடைபெறுமா? ' என்பதிலே சந்தேகம்தான். மாநாட்டுத் தேதியை நிர்ணயித்த பிறகு, இடத்திற்காக ஒன்றரை மாத காலம் இந்த சர்க்கார் நம்மை அலையவிட்டது; அவ்வளவு அலைந்து அரும்பாடுபட்டும், இறுதியில், ' இடம் தர முடியாது, ' என்று, சர்க்கார் கைவிரித்துவிட்டனர்; எனினும் நம் தோழர்களின் இடைவிடா முயற்சி, சலியா உழைப்பு காரணமாக இன்று மாநாடு நடைபெறுகிறது. இந்த வெற்றிக்காக உழைத்த எல்லா தோழர்களுக்கும் என் இதயபூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.*

(பேச்சின் தொடர்ச்சி நாளை வெளிவரும்)

# கழகக் கூட்டங்கள்

★

**உடுமலை**

வெஞ்சமடை தி.மு.க. 2-ம் ஆண்டு விழா

**16—2—55** புதன்-மாலை

*தலைவர்:* இர. தங்கவேலு

*கொடியேற்றுபவர்:*

பல்லடம் பொன்னுசாமி

*பேசுபவர்:*

எம். எஸ். இராமசாமி

*(அன்று இரவு தோழர் ப. கண்ணன் எழுதிய ' கன்னியின் சபதம் ' நாடகம், தோழர் பண்ணன் தலைமையில் நடைபெறும்.)*

★

**மஞ்சிமேடு**

**16—2—55** புதன் மாலை

*தலைவர்:* கே. சதாசிவம்

*பேசுபவர்:*

பி. இ. கண்ணப்பா

★

**பழனி**

தேரடித் திடலில்

**17—2—55** மாலை 6½ மணிக்கு

*பேசுபவர்:*

இரா. நெடுஞ்செழியன்

# தபால் தந்தி இலாகா...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

*யூனிட்டுகள்: ' எஸ் ஐ. ' ' ஈ. எஸ் ' களுக்கென 3 யூனிட்டுக் காலனிகள்.*

**ஒரிசா வட்டம்:**

ஆன்குல்:— *இரண்டு வகையான 2 காலனிகள்.*

**சென்னை:**

நஞ்சன்கூடு:— *குமாஸ்தாக்களுக்கென 4 காலனிகள்.*

# சுறுசுறுப்பு!

*சென்னை, பிப். 14—*

*இன்று மாலையில் சென்னை சட்டசபைக் கூட்டம் ஆரம்பமான போது, போதுமான ' கோரம் ' இல்லையாம்! இதனால் மூன்று நிமிடங்கள் ' கோரம் ' இல்லை என்பதற்கு மணியடிக்கப்பட்டதாம்!*

*மூன்று நிமிடங்கள் தாமதத்திற்குப் பின்னர் கூட்டம் நடைபெற்றதாம்.*

காங்கிரஸ் கூட்டத்தில்

# கல் வீச்சு!

## கூட்டம் கலைக்கப்பட்டது

*திருவனந்தபுரம், பிப். 14—*

*இங்கு காங்கிரஸ்காரர்கள் நடத்திய பொதுக்கூட்டமொன்றில் கற்கள் வீசப்பட்டதாம்; கற்களுடன் மணலும் வீசப்பட்டதாம; கூட்டம் தொடர்ந்து நடைபெற இயலாது போகவே, பாதியில் நிறுத்தப்பட்டதாம்; மேடை மீதிருந்த விளக்குகள் பல நாசமாயிற்றாம்!*

*முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான லட்சுமணன் என்பவர் பேசுகையில், காங்கிரஸ் கட்சி பதவி ஏற்பதைப் பார்த்து கம்யூனிஸ்டுகள் பரபரப்பும், வேதனையும் அடைகிறார்கள் என்று குறிப்பிட்டாராம்.*

*உடனே மேடைமீது கற்கள் வீசப்பட்டனவாம்; போலீசார் வந்தும் பயனில்லாமல் கூட்டம் கலைக்கப்பட்டதாம்; போலீசார் வழக்கொன்றைப் பதிவு செய்திருக்கிறார்களாம்!*

*திரு-கொச்சியில் கம்யூனிஸ்டு கட்சியினர் காங்கிரஸ் எதிர்ப்பு நாள் கொண்டாடினார்களாம்!*

*திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என் அண்ணாதுரை, எம் ஏ.*